**Date : 17.03.2026**
**SC.No.53/2022**
**P.W. 2 திரு.** ஜெகதீஷ்
(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
A3 ஆஜரில்லை அவருக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டது. A6, A7 Died, மற்ற எதிரிகள் ஆஜர்.

**குறுக்கு விசாரணை :**

1. எனது வீட்டிற்கும், இறந்து போன நவீன் குமார் வீட்டுக்கும் இடையே உள்ள தூரம் 300 மீட்டர் தூரம் இருக்கும். நவீன் குமார் வீட்டில் இருந்து ஊர் மந்தை என்பது எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். நவீன் குமார் வீட்டில் இருந்து மயான கரைக்கு நடந்து சென்றால் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 5 நிமிடத்தில் நடந்து செல்ல முடியும், 20 நிமிடம் தேவையில்லை.

2. எங்கள் ஊரிலிருந்து க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு காரில் சென்றால் எவ்வளவு நேரம் ஆகும் என்று எனக்கு தெரியாது, பைக்கில் சென்றால் முக்கால் மணி நேரம் ஆகும். எங்கள் ஊரில் இருந்து ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் அரை மணி நேரத்தில் செல்ல முடியும் என்றால் சரிதான். ஆண்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்றபோது அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

3. ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில் கத்தியால் தாக்கப்பட்டதாக நாங்கள் சொன்னோமா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. சாட்சி தற்போது மருத்துவமனையில் அது பற்றி சொன்னோமா என்று தனக்கு ஞாபகமில்லை என தெரிவிக்கிறார். போலீசார் என்னை ஒரு முறை விசாரணை செய்தார்கள். சம்பவம் நடந்த இரண்டு மாதங்கள் கழித்து என்னை விசாரணை செய்தார்கள்.

4. சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களின் பெயர்களை நான் ஊர்காரர்கள் சொல்லி தெரிந்து கொண்டு போலீஸிடம் சொன்னேன் என்றால் சரியல்ல, எனக்கே அவர்கள் பெயர் தெரியும். போலீசார் விசாரணையில் பின்னால் விசாரித்து தெரிந்து கொண்ட குள்ள புரத்தைச் சேர்ந்த முருகன் மகன் கார்த்திக், பாண்டித்தேவன் மகன் பிரபு பாண்டி, வீரணன் மகன் தங்கபாண்டி, மதயானை மகன் முத்துமாரி மற்றும் எங்கள் ஊரைச் சேர்ந்த மனோஜ் குமார் அவர்கள் பெயர்களை பின்னால் கேட்டு தெரிந்து கொண்டேன் என்று சொல்லி உள்ளேனா என்றால் எனக்கு எதிரிகள் பெயர் தெரியும், அவர்கள் தந்தை பெயர் தெரியாது அதைத்தான் விசாரித்து தெரிந்து கொண்டதாக சொல்லியுள்ளேன்.

5. எனக்கு சம்பவத்திற்கு அப்போதும், இப்போதும் எதிரிகளின் தந்தை பெயர்கள் தெரியாது என்றால் சரியல்ல, தற்போது தெரியும். போலீசார் என்னை விசாரிக்கும் போது எனக்கு எதிரிகளின் தந்தை பெயர்கள் தெரியாது என்றால் மனோஜ் குமார் அப்பா பெயர் தெரியும், நேசமணி, செல்வமணி ஆகியோரின் தந்தை பெயர் தெரியும். நான் மனோஜ் குமாரின் தந்தை பெயரை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6. நான் போலீசார் விசாரணையில் பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட குறிப்பிட்ட இடத்தில் மனோஜ் குமாரின் தந்தை பெயரை சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. மற்றவர்கள் தந்தை பெயர் தெரியாது என சொன்ன காரணத்தினால் அவர்கள் மனோஜ் குமாரின் தந்தை பெயரையும் எழுதிக் கொண்டார்கள். எனக்கு போலீசார் விசாரணை செய்யும்போது மற்ற எதிரிகளை தந்தை பெயர்கள் தெரியாது என்றால் சரிதான். மரண வாக்குமூலம் சொன்னதாக சொல்லும் நேரத்திலும் எதிரிகளின் தந்தை பெயர் தெரியாது என்றால் சரிதான். குள்ளபுரத்திற்கும் அணைக்கரைப்பட்டிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 1 ½ கிலோ மீட்டரில் இருந்து 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். இடையில் எந்த ஊரும் கிடையாது என்றால் சரிதான்.

7. குள்ளபுரத்திலிருந்து அணைக்கரைப்பட்டி ஊருக்கு வர வேண்டும் என்றால் முதலில் அணைக்கரை பட்டியில் கல்யாண மண்டபம் மட்டும் கோயில் உள்ளது என்றால் சரிதான். கல்யாண மண்டபத்திலிருந்து மயானம் சுமார் அரை கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரியல்ல, 200 மீட்டர் தூரம் இருக்கும். கல்யாண மண்டபத்தில் இருந்து மந்தை என்பது எவ்வளவு தூரத்தில் இருக்குமென்றால் 150 மீட்டர் தூரம் இருக்கும்.

8. அணைக்கரை பட்டியிலிருந்து டி.புதூர் என்பது எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் ஒரு கிலோ மீட்டரில் இருந்து ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருக்கும். பெருமாள் கோயில் பட்டி என்பது அங்கிருந்து 14 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இரு சக்கர வாகனத்தில் சென்றால் எங்கள் ஊரில் இருந்து முக்கால் மணி நேரத்தில் செல்ல முடியும் என்றால் இருக்கலாம். நான் சம்பவத்தன்று முதல் முறையாக இறந்து போனவரை எங்கு எப்போது வைத்து பார்த்தேன் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மாலையில் பார்த்ததாக சொல்லி உள்ளேன்.

9. மாலையில் முதல் முறையாக பார்க்கும்போது மாலை 6 மணி 6:30 மணி இருக்கும் எங்கு வைத்து முதல் முறையாக பார்த்தேன் என்றால் மாலையில் எங்கள் ஊரில் ஒரு ஊர் முக்கில் ஒரு பாலம் உள்ளது அந்த பாலத்தில் வைத்து தான் நான் பார்த்தேன். அந்தப் பாலம் குள்ளபுரம் பிரிவில் உள்ளது என்றால் சரியல்ல. அந்தப் பாலத்திற்கும், குள்ளபுரம் பிரிவிற்கும் உள்ள தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் 200 மீட்டர் தூரம் இருக்கும். குள்ளபுரம் பிரிவிலும் ஒரு பாலம் உள்ளதா என்றால் ஆற்றுப்பாலம் உள்ளது.

10. நான் கொடுத்த மரணவாக்குமூலத்தில் முதல் முதலில் கார்த்தி என்னை கத்தியால் குத்தினார் என்று சொல்லி உள்ளேன். எங்கள் ஊரில் இருந்து கிழக்கு பக்கமாக சுடுகாடு இல்லை என்றால் சரியல்ல, கிழக்கு பக்கம் தான் உள்ளது. 1–ம் எதிரி நேசமணி எனது மூக்கிலும் குத்திவிட்டார் என்று நான்

மரணவாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதுகில் யாரோ ஓடி வந்து குத்தி விட்டார்கள் என்று மரண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

11. நான் கொடுத்த மரணவாக்குமூலத்தில் நான் சம்பவயிடத்திலேயே அதிக ரத்தப்போக்கு ஏற்பட்டதால் மயக்கமாகி விட்டேன் என சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, சுயநினைவு இழந்து விட்டேன் என சொல்லியுள்ளேன். இந்த வழக்கில் நேசமணி, மனோஜ் குமார், கார்த்தி, செல்வமணி ஆகியோர்கள் தவிர மற்ற மூன்று பேரும் எனக்கு அடையாளம் தெரியாது, பார்த்தால் தான் தெரியும் என்று நீதித்துறை நடுவர் முன்னிலையில் மரண வாக்குமூலத்தை சொல்லி உள்ளேன் என்றால் பார்த்தால் சொல்வேன் என்று சொல்லி உள்ளேன். அவ்வாறு தான் மரண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12. அதன் பிறகு மற்றவர்கள் பெயர்களை போலீஸ் சொல்லித்தான் நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரியல்ல, எனக்கு ஏற்கனவே தெரியும் எனக்கு சம்பவ சமயத்திலேயே எதிரிகள் பெயர் தெரியும் அவர்கள் தந்தை பெயர் தான் தெரியாது. சம்பவத்தின் போது எனக்கு எதிரிகள் பெயர் தெரியாது என்றும், அதனால் தான் போலீசார் விசாரணை செய்த வாக்குமூலத்திலும் நான் அவர்கள் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மரண வாக்குமூலத்தில் அதனால் தான் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக மறுநாள் போலீசார் என்னை வந்து விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

13. இந்த வழக்கு சம்பந்தமாக இரண்டு மாதங்கள் கழித்து முதல் முறையாக என்னை விசாரித்த போலீசார் யாரென்று எனக்கு சரியாக ஞாபகமில்லை, காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி விசாரித்தார்கள் முதல் முதலில் சம்பவத்தன்று நான் பார்த்தபோது இறந்து போன நவீன் குமார் எதில் வந்தார் என்றால் பைக்கில் வந்தார். யாருடன் அவர் முதன் முதலில் நான் பார்க்கும்போது வந்தார் என்றால் அவர் மட்டும்தான் தனியாக வந்தார்.

14. அதேபோல் அர்ஜுனன் மற்றும் சசிகுமார் ஆகியோர்களை நான் முதன் முதலில் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் எங்கள் ஊர் சுடுகாட்டு பக்கத்தில் உள்ள நிழற்கூடையில் வைத்து பார்த்தேன். திருவிழா மந்தையில் போலீசார் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது என்றால் சரியல்ல, அன்றைய தினம் போலீசார் இல்லை. முறைப்படி காவல் நிலையத்தில் அனுமதி வாங்கி திருவிழா நடத்துவார்கள் என்றும், போலீசார் போட்டு இருப்பார்கள் என்றால் சரியல்ல.

15. போலீசார் இருந்தார்கள் என்றும் வேண்டுமென்றே வழக்குக்காக போலீசார் இல்லை என குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. சுடுகாட்டு கொட்டகை பக்கத்தில் எத்தனை எரியூட்டும் பொட்டகை உள்ளது என்றால் பிணம் எரிக்கும் இடத்தில் ஒரே ஒரு கொட்டகை மட்டுமே உள்ளது ஒரு நிழற்கூடை உள்ளது அவ்வளவுதான் நிழற்கூடைக்கும், சுடுகாட்டு கொட்டகைக்கும் உள்ளே தூரம் சுமார் 50 மீட்டர் இருக்கும்.

16. அந்த நிழற்கூடையிலிருந்து மெயின் ரோடு என்பது சுமார் 10 நிமிடத்தில் நடந்து செல்லக்கூடிய தூரம் என்றால் சரியல்ல, இரண்டு நிமிடத்தில் நடந்து செல்ல முடியும். சம்பவ இடத்தில் பீர் பாட்டில்கள் மற்றும் உடைந்த காலி பாட்டில்கள் இருந்தது என்றால் சரியல்ல, அவ்வாறு பாட்டில்கள் எதுவும் இல்லை. சம்பவ இடத்தில் சரக்கு பாட்டில்கள் எதுவும் அங்கு இல்லை எனக்கு பின்னந்தலையில் சரக்கு பாட்டிலால் அடிபட்டது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணையானது மீண்டும் தொடங்கப்படுகிறது.</u>**

17. நானும் இறந்து போன நவீன் குமாரும் எங்கள் இருசக்கர வாகனத்தில் மயான கரைக்கு சென்றோம். அந்த இருசக்கர வாகனம் சம்பவ இடத்தில் சம்பவம் முடிந்த பிறகு அங்கே இருந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை, நான் எடுக்கவில்லை. சம்பவம் முடிந்த பிறகு நாங்கள் நாலு பேரும் அந்த வண்டியை எடுக்கவில்லை. எனது கையிலும் மற்ற நான்கு நபர்கள் கையிலும்

செல்போன் இருந்தது என்றால் சரிதான். சாட்சி சசிகுமாரிடம் செல்போன் இருந்ததா என்று எனக்கு தெரியவில்லை.

18. இந்த சம்பவம் முடிந்த பிறகு நானோ, மற்றவர்களோ ஊரில் இருந்தவர்களுக்கு செல்போன் மூலம் தகவல் சொல்ல முயற்சி செய்தோமா என்றால் அவ்வாறு முயற்சி செய்யவில்லை, போலிசிற்கும் நாங்கள் போன் மூலம் தகவல் சொல்லவில்லை. போலீசார் இறந்து போன நபரின் செல்போனை காட்டி விசாரணை ஏதேனும் செய்தார்களா என்றால் அவ்வாறு விசாரணை எதுவும் செய்யவில்லை. போலீஸ் விசாரிக்கும்போது முதல் விசாரணையில் சொன்னது போல் சம்பவ தினத்தன்று 06.00– 6:30 மணியளவில் நானும், நவீன் குமாரும் சுடுகாட்டு நிழற்கூடையில் உட்கார்ந்து மது அருந்தினோம் என்ற விபரத்தை போலீசார் விசாரிக்கும்போது சொல்லி உள்ளேன்.

19. 7 பேரும் நாங்கள் நவீன் குமாரையும் என்னையும் அர்ஜுனனையும் தடுக்கக்கூடாது என்பதற்காக எதிரிகள் ஏழு பேரும் சேர்ந்து பிடித்துக் கொண்டார்கள் என்று நான் முதல் விசாரணை சொன்னது போல் போலீசார் விசாரணை சொல்லியுள்ளேனா என்றால் என்னை பிடித்துக் கொண்டார்கள் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன். நாங்கள் அந்த இடத்திற்கு செல்லும்போது கையில் மது பாட்டில்களை எடுத்துச் சென்றோமா என்றால் அவ்வாறு எடுத்துச் செல்லவில்லை. நான் சம்பவ சமயத்தில் குடி போதையின் ஆளுமையில் இல்லை என்றால் சரிதான் நல்ல தெளிவாகத்தான் இருந்தோம்.

20. சம்பவயிடத்திற்கு யார் யார் என்னென்ன வாகனத்தில் வந்தார்கள் என்ற விபரத்தை நான் குறிப்பிட்டு போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான், போலீசார் அதைப்பற்றி விளக்கமாக கேட்காததால் நான் அதை பற்றி சொல்லவில்லை. யார் என்ன மாடல் வண்டி யார் ஓட்டினார்கள் என்ற விபரத்தை போலீசார் என்னிடம் அது பற்றி கேட்காத காரணத்தினால் நான் குறிப்பிட்ட சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இரண்டு மின்விளக்குகள் இருந்தது அவை வெளிச்சம் தந்தது என்ற விபரத்தை போலீசார்

என்னை விசாரிக்கும் பொழுது சொல்லி உள்ளேனா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. சம்பவயிடத்தில் இருந்த இரண்டு மின்விளக்குகள் இருந்த இடத்தில் பல்புகள் கிடையாது என்றால் சரியல்ல, பல்புகள் இருந்தது.

21. எரியும் நிலையில் பல்புகள் இல்லை என்றால் சரியல்ல, பல்புகள் எரிந்து கொண்டிருந்தது, வெளிச்சமாகத்தான் இருந்தது. நீதித்துறை நடுவர் என்னை விசாரிக்கும்போது அந்த இடம் வெளிச்சமாக இருந்தது என்ற விபரத்தை நான் சொன்னேனா என்றால் அவ்வாறு நான் சொன்னேனா என்று எனக்கு சரியாக ஞாபகமில்லை. மயான கரைக்கு அருகிலேயே வரிசையாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

22. மயான கரைக்கு பின்புறம் வரிசையாக தோட்டங்கள் அமைந்துள்ளது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் காயமடைந்த நபரை தூக்குவது தொடர்பாக எனது சட்டையில் ரத்தக்கரை இருந்தது என்றால் சரியல்ல நான் தூக்க வில்லை. எனக்கு ஏற்பட்ட காயத்தால் எனக்கு சட்டையில் ரத்தக்கரை இருந்தது. போலீசார் என்னை விசாரிக்கும்போது அந்த ரத்தம் தோய்ந்த துணிகளை காட்டினேனா என்றால் நான் காட்டவில்லை.

23. எனது மொபைல் போனை போலீசார் விசாரிக்கும்போது நான் காட்டினேனா என்றால் அவ்வாறு காட்டவில்லை. ஊர் மந்தையில் திருவிழா 07.30 – 08.00 மணி வரை திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்த திருவிழாவில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பரிசளிப்பு வழங்கினார்கள் என்றால் சரிதான். அந்த திருவிழாவிற்கு எங்கள் உறவினர்கள் அழைப்பின் பேரில் வந்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் ஆண்டிபட்டி தி.மு.க கட்சியை சேர்ந்த திரு. செல்வம் என்பவர் வந்திருந்தாரா என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை.

24. நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் 15.01.2021 –ம் தேதியன்று நவீன் குமார் குள்ளபுரம் ஊருக்கு சென்று அங்கு அமாவாசை என்பருடன் தகராறு ஈடுபட்டதாக கூறுவது பொய் என்றும், எந்த காலத்திலும் அம்மாவாசை

குடிசைக்குச் சென்று எந்த தகராறிலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. மயான கரையில் உட்கார்ந்து நானும் எதிரிகளும் எல்லோரும் ஒன்றாக குடிப்போம் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல சம்பவயிடம் கும்மிரட்டு என்றும் அங்கு எரியும் நிலையில் எந்த விளக்கும் கிடையாது என்றால் சரியல்ல.

25. இறந்து போன நவீன் குமார் ஏற்கனவே குடிபோதையில் பல பேருடன் தகராறு செய்து அவருக்கு ஊரிலும், அக்கம், பக்கத்திலும் முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. அவர் வேலை பார்த்து வந்த விவசாய கல்லூரியிலும் அவருக்கு தகராறு காரணமாக பல முன்விரோதங்கள் இருந்து வந்தது என்றால் சரியல்ல. அந்த முன் விரோதம் காரணமாக சம்பவத்தன்று வேறு நபர்கள் இருட்டில் வந்திருந்தவரை காயப்படுத்தி என்னையும் காயப்படுத்தி விட்டு போய் விட்டார்கள் என்றால் சரியல்ல.

26. பின்னிட்டு நான் ஏற்கனவே மனோஜ் குமார் என்பவர் மீது இருந்த முன் விரோதம் காரணமாகவும், 1, 2 எதிரிகளுக்கு அவர் பழக்கம் என்பதாலும் அதை மிகைப்படுத்தி பொய்யாக எதிரிகள் அனைவரையும் இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு குடிப்பழக்கம் எந்த காலத்திலும் கிடையாது என்றால் சரியல்ல.

27. 2ம் எதிரி கார்த்தி என்னை தாக்கியதாக கூறுவது பொய் என்றும், அதனால் எனக்கு காயம் ஏற்பட்டதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. 1ம் எதிரி இறந்து போன நபரை கொன்றதாக கூறுவது பொய் என்றும், மற்ற எதிரிகள் யாரும் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. அர்ஜுனன் மயான கரையில் இருந்தார் என்று கூறுவது பொய் என்றால் சரியல்ல.

28. நான் போலீசார் முன்னிலையில் கொடுத்த வாக்குமூலத்தில் மேலிருந்து கீழாக 15 வது வரியில் நான் பின்னால் விசாரித்து விவரம் தெரிந்து கொண்ட 2வது எதிரி கார்த்திக், 4-ம் தேதி பிரபு பாண்டி, 5-ம் எதிரி தங்கப்பாண்டி 6-ம் எதிரி முத்துமாரி மற்றும் எங்கள் ஊரைச் சேர்ந்த மனோஜ் குமார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் அப்பா

பெயர்களை விசாரித்து தெரிந்து கொண்டேன் என்று தான் நான் போலீஸ் விசாரணையில் சொல்லி உள்ளேன்.

29. என்னிடம் காண்பிக்கும் வாக்குமூலத்தில் எதிரிகள் பெயரையும் ஊரையும் அவர்களது தந்தை பெயரையும் பின்னால் கேட்டு தெரிந்து கொண்டதாக தான் உள்ளது என்றும் தற்சமயம் நான் நீதிமன்றத்தில் எதிரிகள் பெயரை ஏற்கனவே தெரியும் என பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நீதித்துறை நடுவர் முன்னிலையில் கொடுத்த மரண வாக்குமூலத்தில் சொல்லி உள்ள விபரங்களும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இறந்து போனவருக்கும் அவரது இறப்பிற்கும் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.17 16:00:08 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.